# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 1774/7 - 2012 සැප්තැම්බර් මස 04 වැනි අඟහරුවාදා - 2012.09.04

*1774/7 ஆம் இலக்கம் - 2012 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 04 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி

## உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள்

**(262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 65 அ (2) என்னும் பிரிவின் கீழ் திக்குவல்ல பிரதேச சபையின் உறுப்பினரொருவரின் பதவியிலான வெற்றிடத்தை நிரப்புதல்**

திக்குவல்ல பிரதேச சபை உறுப்பினரொருவரின் பதவி நீக்கப்பட்டதன் காரணமாக அவ் உறுப்பினர் பதவி வெற்றிடமாகியுள்ளதாதலாலும்;

ஆர். பீ. சுதுசிங்ஹ எனும் உறுப்பினர் சேர்ந்திருந்த அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியான மக்கள் விடுதலை முன்னணியின் செயலாளர், முப்பது (30) நாட்கள் காலப்பகுதிக்குள் உறுப்பினரொருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு வெளிப்படுத்தப்பட வேண்டிய அக்கட்சியைச் சேர்ந்தவரும், திக்குவல்ல பிரதேச சபையின் உறுப்பினரொருவராகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு கட்டளைச் சட்டத்தின் கீழ் தகுதியுடையவருமான ஆளொருவரைப் பெயர் குறிப்பதற்கு மேற்கூறப்பட்ட கட்டளைச் சட்டத்தின் 65அ (2) ஆம் பிரிவின் கீழ் என்னால் பணிக்கப்பட்டுள்ளாராதலாலும் ;

அவ்வெற்றிடத்தை நிரப்புவதற்காக மேற்கூறப்பட்ட கட்டளைச் சட்டத்தின் கீழ் தகுதியுடையவராக திரு. கே. பீ. சோமசிறி அவர்களை மேற்கூறப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியின் செயலாளரினால் பெயர் குறிக்கப்பட்டிருப்பதனாலும் ;

இப்போது திக்குவல்ல பிரதேச சபையின் தெரிவத்தாட்சி அலுவலர் கந்த உட ஆரச்சிகே சுனெத் லோச்சன ஆகிய நான், (262 ஆம் அத்தியாயமான ) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 65 அ (2) என்னும் பிரிவின் நியதிகளின்படி செயற்பட்டு திரு. கே. பீ. சோமசிறி என்பவர் திக்குவல்ல பிரதேச சபையின் உறுப்பினரொருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.

ஸீ. ஏ. சுனெத் லோச்சன,
தெரிவத்தாட்சி அலுவலர்,
திக்குவல்ல பிரதேச சபை.

தேர்தல்கள் அலுவலகம்,
மாத்தறை,
2012, ஓகத்து 23.

09 - 532

***(262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 65 அ (2) என்னும் பிரிவின் கீழ் பொல்கஹவெல பிரதேச சபையின் உறுப்பினரொருவரின் பதவியிலான வெற்றிடத்தை நிரப்புதல்***

*கேட்டு விலகல் காரணமாக பொல்கஹவெல பிரதேச சபையின் உறுப்பினரொருவரின் பதவி, வெற்றிடமாகியுள்ளதாதலாலும்;*

*விஜேசுந்தர விக்கிரமசிங்ஹ பண்டிதரத்ன வாஸல முதியன்சே ராலஹாமில்லாகே விமுக்தி துமிந்த பங்டார விஜேசுந்தர எனும் உறுப்பினர் சேர்ந்திருந்த அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியான மக்கள் விடுதலை முன்னணியின் செயலாளர், முப்பது (30) நாட்கள் காலப்பகுதிக்குள் உறுப்பினரொருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு வெளிப்படுத்தப்பட வேண்டிய அக்கட்சியைச் சேர்ந்தவரும், பொல்கஹவெல பிரதேச சபையின் உறுப்பினரொருவராகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு கட்டளைச் சட்டத்தின் கீழ் தகுதியுடையவருமான ஆளொருவரைப் பெயர் குறிப்பதற்கு மேற்கூறப்பட்ட கட்டளைச் சட்டத்தின் 65அ (2) ஆம் பிரிவின் கீழ் என்னால் பணிக்கப்பட்டுள்ளாராதலாலும் ;*

*மேலே கூறப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியின் செயலாளர், அத்தகைய வெற்றிடத்தை நிரப்புவதற்கு மேலே சொல்லப்பட்ட கட்டளைச் சட்டத்தின் கீழ் தகுதியுள்ள ஆளொருவராக திரு. எதிரிசிங்ஹ ஹேவகே சோமரத்ன எதிரிசிங்ஹ என்பவரைப் பெயர் குறித்து நியமித்துள்ளாராதலாலும் ;*

*இப்போது பொல்கஹவெல பிரதேச சபையின் தெரிவத்தாட்சி அலுவலர் அப்துல் ஒபூர் முகம்மது நபீல் ஆகிய நான், (262 ஆம் அத்தியாயமான ) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 65 அ (2) என்னும் பிரிவின் நியதிகளின்படி செயற்பட்டு திரு. எதிரிசிங்ஹ ஹேவகே சோமரத்ன எதிரிசிங்ஹ என்பவர் பொல்கஹவெல பிரதேச சபையின் உறுப்பினரொருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.*

*ஏ. ஓ. எம். நபீல்,*
*தெரிவத்தாட்சி அலுவலர்,*
*பொல்கஹவெல பிரதேச சபை.*

*தேர்தல்கள் அலுவலகம்,*
*குருநாகல்,*
*2012,ஓகத்து 27.*

*09 - 533*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.